**<u>சுருக்கம்</u>**

திட்டங்கள் – சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் 2009–2010 – அங்கன்வாடி கட்டடங்கள், சத்துணவு மையக் கட்டடங்கள் மற்றும் சத்துணவு சமையற் கூடங்கள் கட்டுதல் பணிகளுக்காக வரையறுக்கப்பட்ட நிதியிலிருந்து ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினரும் பரிந்துரை செய்ய வேண்டிய தொகை ரூ.10.00 இலட்சத்திலிருந்து ரூ.20.00 இலட்சமாக உயர்த்தி ஆணை வெளியிடப்படுகிறது.

---

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (மாஅதி1) துறை

அரசாணை (நிலை) எண். 125 நாள்: 10.11.2009

படிக்கப்பட்டவை:

1. அரசாணை (நிலை) எண். 61, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, நாள் 16.7.2009.
2. அரசாணை (நிலை) எண். 90, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, நாள் 11.8.2009.
3. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையரின் கடித எண். 27429/2009/ என்இடிஎம்–2, நாள் 21.10.2009.

* * * * *

**<u>ஆணை:</u>**

படிக்கப்பட்டவை 1 மற்றும் 2ல் உள்ள அரசாணைகளில் 2009–2010ஆம் ஆண்டிற்கான சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டத்திற்கான வழிகாட்டு நெறிமுறைகள் வெளியிடப்பட்டுள்ளது. அதில் இன்னபிறவற்றுடன் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் தொகுதி ஒன்றுக்கு நிதி ஒதுக்கீடான ரூ.170 இலட்சத்தில் முன்னுரிமை பணிகளை கட்டாயமாக எடுத்துச் செய்ய ரூ.85 இலட்சத்தினை “வரையறுக்கப்பட்ட நிதியாக” ஒதுக்கீடு செய்தும், மீதமுள்ள “வரையறுக்கப்படாத நிதியான” ரூ.85 இலட்சத்தில், தடைசெய்யப்பட்ட பணிகளின் பட்டியலில் இடம் பெறாத எந்தப் பணிகளையும் தங்கள் விருப்பப்படி சட்டமன்ற உறுப்பினர் தேர்வு செய்யவும் ஆணையிடப்பட்டுள்ளது. மேலும், பெரும்பான்மையான அங்கன்வாடி மையங்கள், சத்துணவு மையங்கள், சத்துணவு சமையற் கூடங்கள் குறிப்பாக நகர்ப்புறப் பகுதிகளில் மற்றும் ஓரளவு ஊரகப் பகுதிகளில் பழுதடைந்த கட்டடங்களில் இயங்குவதால் அவைகளுக்கு படிப்படியாக புதிய கட்டடங்கள் கட்டித் தர நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்பதால், முன்னுரிமைப் பணியாக 2009–10ஆம் ஆண்டு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்ட நிதியில் வரையறுக்கப்பட்ட நிதியான ரூ.85.00 இலட்சத்தில் ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினரும் ரூ.10.00 இலட்சத்தை அங்கன்வாடி கட்டடங்கள், சத்துணவு மையக்

கட்டடங்கள், சத்துணவு சமையற் கூடங்கள் கட்டுதல் ஆகிய பணிகளை ஊரக மற்றும் நகர்ப்புற பகுதிகளில் எடுத்துச் செய்ய பரிந்துரைக்க வேண்டும் என்றும் ஆணையிடப்பட்டுள்ளது.

2. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தலைமையில் 17.9.2009 மற்றும் 18.9.2009 ஆகிய நாட்களில் நடைபெற்ற மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மற்றும் காவல் துறை அதிகாரிகள் மாநாட்டில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அங்கன்வாடி கட்டடங்கள், சத்துணவு மையக் கட்டடங்கள், சத்துணவு சமையற்கூடங்கள் கட்டுதல் ஆகிய பணிகளுக்காக சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டத்தில் ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினருக்கும் ஒதுக்கீடு செய்யப்படும் தொகை ரூ.10.00 இலட்சத்திலிருந்து ரூ.20.00 இலட்சமாக உயர்த்தி அறிவித்துள்ளார்கள்.

3. மேற்கண்ட அறிவிப்பிற்கிணங்க, ஒரு சட்டமன்ற தொகுதிக்கு தற்போதுள்ள ஒதுக்கீடான ரூ.170 இலட்சத்தில் கட்டாயப் பணிகளைச் செய்ய 50 விழுக்காடு நிதியான ரூ.85 இலட்சத்திலிருந்து அங்கன்வாடி கட்டடங்கள், சத்துணவு மையக் கட்டடங்கள், சத்துணவு சமையற்கூடங்கள் கட்டுதல் ஆகிய பணிகளை ஊரக மற்றும் நகர்ப்புறப் பகுதிகளில் ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினரும் எடுத்துச் செய்ய பரிந்துரை செய்ய வேண்டிய தொகையை ரூ.10.00 இலட்சத்திலிருந்து ரூ.20.00 இலட்சமாக உயர்த்திட கோரும் கருத்துருவினை ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர் அனுப்பியுள்ளார். மேலும், இவ்வாறு ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினரும் வரையறுக்கப்பட்ட நிதியிலிருந்து அங்கன்வாடி கட்டடங்கள், சத்துணவு மையக் கட்டடங்கள், சத்துணவு சமையற்கூடங்கள் கட்டுதல் ஆகிய பணிகளுக்காக ரூ.20.00 இலட்சத்தினை ஒதுக்க வேண்டும் என்றும் வரையறுக்கப்பட்ட நிதியில் மீதமுள்ள ரூ.65.00 இலட்சத்தில் (ரூ.85.00 இலட்சம் – ரூ.20.00 இலட்சம்) சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் விருப்பப்படி வரையறுக்கப்பட்ட பணிகளை மேற்கொள்ளலாம் என்றும் தெரிவித்துள்ளார். மேலும் இவ்வாறு அங்கன்வாடி கட்டடங்கள், சத்துணவு மையக் கட்டடங்கள், சத்துணவு சமையற்கூடங்கள் கட்டுதல் ஆகிய பணிகளுக்காக உயர்த்தப்பட்ட தொகையான ரூ.20.00 இலட்சத்தினை கட்டாயப் பணிகளுக்கான நிதியிலிருந்து எடுத்துச் செய்ய 2009–2010ஆம் ஆண்டிலிருந்தே நடைமுறைப்படுத்தலாம் என்றும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர் தெரிவித்துள்ளார். எனினும், 2009–2010ஆம் ஆண்டிற்கு ஏற்கனவே சில சட்டமன்ற உறுப்பினர்கள் தற்போதுள்ள வழிகாட்டு நெறிமுறைகளின்படி ரூ.160 இலட்சத்திற்கும் மேலாக பணிகளுக்கான பரிந்துரையை அளித்துள்ளதாகவும் அதனால் அங்கன்வாடி கட்டடங்கள், சத்துணவு மையக் கட்டடங்கள், சத்துணவு சமையற்கூடங்கள் கட்டும் பணிக்காக தற்போது கூடுதலாக உயர்த்தப்பட்ட ரூ.10.00 இலட்சம் ஒதுக்கீடு செய்ய முடியாத சூழ்நிலையில் உள்ளார்கள் என்றும் அத்தகைய இனங்களில் தற்போது உயர்த்த உத்தேசிக்கப்பட்டுள்ள தொகையை ஒதுக்கீடு செய்யுமாறு சம்பந்தப்பட்ட சட்டமன்ற உறுப்பினர்களிடம் வலியுறுத்த வேண்டாம் என்றும் அவர்கள் ஏற்கனவே பரிந்துரைத்த பணிகளுக்கான நிர்வாக அனுமதி வழங்க அனுமதிக்கலாம் என்றும் அரசுக்கு பரிந்துரை செய்துள்ளார்.

4. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையரின் செயற்குறிப்புகளை அரசு கவனமாகப் பரிசீலித்து அவற்றை ஏற்று செயல்படுத்தலாம் என முடிவு செய்து பின்வருமாறு ஆணையிடுகிறது.

(i) சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டத்தின்கீழ் தொகுதி ஒன்றிற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள வரையறுக்கப்பட்ட நிதியான ரூ.85 இலட்சத்தில், ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினரும் அங்கன்வாடி கட்டடங்கள், சத்துணவு மையக் கட்டடங்கள், சத்துணவு சமையற்கூடங்கள் கட்டுதல் ஆகிய பணிகளை எடுத்துச் செய்வதற்காக ஒதுக்கீடு செய்யப்படும் தொகை ரூ.10.00 இலட்சத்திலிருந்து ரூ.20.00 இலட்சமாக உயர்த்தப்படுகிறது. மேலும் இந்த உயர்வு இந்த 2009–2010ஆம் ஆண்டிலிருந்தே நடைமுறைக்கு வருகிறது.

(ii) வரையறுக்கப்பட்ட நிதியில் மீதமுள்ள ரூ.65 இலட்சத்தில் சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் விருப்பப்படி வரையறுக்கப்பட்ட பணிகளை மேற்கொள்ள அனுமதி அளிக்கப்படுகிறது

(iii) 2009–2010ஆம் ஆண்டிற்கு ஏற்கனவே சில சட்டமன்ற உறுப்பினர்கள் தற்போதுள்ள வழிகாட்டு நெறிமுறைகளின்படி ரூ.160–ரூ.170 இலட்சத்திற்கு பணிகளுக்கான பரிந்துரையை அளித்துள்ள இனங்களில் அங்கன்வாடி கட்டடங்கள், சத்துணவு மையக் கட்டடங்கள், சத்துணவு சமையற்கூடங்கள் கட்டுதல் ஆகிய பணிகளுக்காக தற்போது உயர்த்தப்பட்ட ரூ.10.00 இலட்சம் தொகையை 2009–10 ஆண்டிற்கு ஒதுக்கீடு செய்யுமாறு சம்பந்தப்பட்ட சட்டமன்ற உறுப்பினர்களிடம் வலியுறுத்த வேண்டாம். அவர்கள் ஏற்கனவே பரிந்துரைத்த பணிகளுக்கான நிர்வாக அனுமதியை வழங்கிடலாம். எனினும் அடுத்தாண்டு 2010–2011 முதல் உயர்த்தப்பட்ட தொகையான ரூ.20.00 இலட்சத்தை சம்பந்தப்பட்ட சட்டமன்ற உறுப்பினர்கள் ஒதுக்கீடு செய்ய வேண்டும்.

(iv) ரூ.160 இலட்சத்திற்கும் குறைவாக பணிகளுக்கு பரிந்துரை அளித்துள்ள இனங்களில், தற்போது உயர்த்தப்பட்ட ரூ.10.00 இலட்சம் தொகையை இந்தாண்டே ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும் என்பதால், அத்தகைய இனங்களில் நடப்பு 2009–10ஆம் ஆண்டிற்கு உயர்த்தப்பட்ட ரூ.10.00 இலட்சம் தொகையை சம்பந்தப்பட்ட சட்டமன்ற உறுப்பினர்கள் ஒதுக்கீடு செய்யவேண்டும் .

5. இந்த ஆணை நிதித்துறையின் அ.சா.எண். 3049/FS/P/09, நாள் 29.10.2009–ல் பெற்ற ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

க. அஷோக் வர்தன் ஷெட்டி,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
அனைத்து சட்டமன்ற உறுப்பினர்கள்,
(ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர், சென்னை – 15. வழியாக)
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர், சென்னை – 15.
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள் (சென்னை நீங்கலாக).
ஆணையர், சென்னை மாநகராட்சி, சென்னை – 3.
பேரூராட்சிகள் ஆணையரகம், சென்னை – 108.

ஆணையர், கருவூலக் கணக்கு, சென்னை – 15.
உறுப்பினர் – செயலர், மாநிலத் திட்டக்குழு, சென்னை – 5.
இயக்குநர், உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை, சென்னை – 108.
மாநில தலைமை கணக்காயர், சென்னை –6/18/35.
சம்பளக் கணக்கு அலுவலர், (தலைமைச் செயலகம்) சென்னை – 9.
சம்பளக்கணக்கு அலுவலர் (தெற்கு), சென்னை – 35.
சம்பளக்கணக்கு அலுவலர் (கிழக்கு), சென்னை – 5.
சம்பளக்கணக்கு அலுவலர் (வடக்கு), சென்னை – 1.
சம்பளக்கணக்கு அலுவலர், மதுரை.
அனைத்து மாவட்ட கருவூல அலுவலர்கள்,
அரசு செயலர், நகராட்சி நிர்வாகம் (மற்றும்) குடிநீர் வழங்கல் துறை, சென்னை – 9.
செயலாளர், தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை–9.

<u>நகல்</u>:
தலைமைச் செயலக அனைத்து துறைகள், சென்னை – 9.
மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் செயலாளர், சென்னை – 9.
மாண்புமிகு துணை முதலமைச்சரின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை – 9.
சட்டமன்றப் பேரவை தலைவர், தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை – 9.
அரசு துணைச் செயலாளர், நிதி (வரவு/செலவு) துறை, சென்னை – 9.
தலைமைச் செயலாளர் அவர்களின் தனிச் செயலர், சென்னை–9.
நிதி (வரவு–செலவு திட்டம் /பொது–1/பொது2/சிறுசேமிப்பு/ஊரக வளர்ச்சி) துறை, சென்னை –9.
அனைத்து அமைச்சர்களின் முதுநிலை நேர்முக உதவியாளர்கள், சென்னை – 9.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.

சார்புச் செயலாளர்